# திறவுகோல்

2053

ஆவணி

மாத இதழ்



வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# விடுதலை வேள்விக்கு தன்னுயிரை ஆகுதியாக்கிய சுப்பிரமணிய சிவா

ஏகாதிபத்தியம் மூலம் நாட்டை அடிமை செய்வது என்பது அனுமன் வாலிலே பற்ற வைத்த தீயைப் போன்றது. இந்த மகத்தான வாக்கியத்துக்கு சொந்தக்காரர் சுப்பிரமணிய சிவா. அவரது ஒவ்வொரு வார்த்தைகளும் அணுகுண்டைவிடவும் சக்தி படைத்தவையாக இருந்தன. சிவாவின் பேச்சு உண்டாக்கிய அக்னியை ஆங்கிலேயர்களால் அணைக்க முடியவில்லை. சிவா வார்த்தை போர் முறையை கையாளத் தெரிந்தவராக இருந்தார். எதிரியின் பலம் என்ன பலவீனம் என்னவென்பது சிவாவுக்கு நன்கு தெரிந்திருந்தது. சிவாவை இலேசாக எடைபோட்ட ஆங்கிலேய அரசு பிறகு அவரது வார்த்தை வெடிகுண்டுக்கு அஞ்சி நடுநடுங்கியது. படிப்பறிவில்லாதவர்கள் கூட சிவாவின் ஆவேச பேச்சால் விடுதலைப் போரில் களம் கண்டனர். சிவாவை ஆங்கிலேய அரசு குறிவைத்த போதும் அதிலிருந்து போக்குகாட்டி தப்பி வந்தார். ஆங்கிலேய அதிகார வர்க்கத்துக்கு சிவா என்ற பெயர் வேம்பாகக் கசந்தது. ஒற்றை ஆளாய் ஒட்டுமொத்த அதிகார வர்க்கத்தையும் எதிர்த்துப் பார்த்தார் சிவா. ஒரு போராளி எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு சிவாவே நல்ல உதாரணம். போராடத் துணிந்துவிட்டால் எதிரே விண்ணை முட்டும் மலையென்ன சின்ன மடுவென்ன எல்லாம் ஒன்றுதான் போராடும் மனிதர்களுக்கு. சிவா ஒரு எரிமலை எந்த சட்ட திட்டமும் அங்கே செல்லுபடியாகாது.

தேசத்தின் விடுதலையைத் தவிர எந்தவொரு சமரச திட்டத்தையும் அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அடிமை சேவகத்தை மனமுவந்து ஏற்றுக் கொண்டவர்கள் திருவனந்தபுரம் சமஸ்தானத்திலிருந்து அவரை விரட்டினர். ஆறிலும் சாவு நூறிலும் சாவு என சிவா கால்நடையாகவே திருநெல்வேலிக்குப் புறப்பட்டார். செல்லும் வழியெங்கும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் ஆங்கிலேயரை எதிர்த்து ஆணித்தரமான கருத்துக்களை மக்கள் முன் வைக்கத் தயங்கவில்லை. வழிநெடுகிலும் விடுதலை விதை விதைத்தார் அந்த வித்து விருட்சமாய் வளர்ந்தது. நசுக்க நினைத்தால் எறும்பு கூட எதிர்த்து நிற்கும், சுதந்திரம் எனது பிறப்புரிமை என முழங்கினார். ஆண்டான் அடிமை முறையை கருவறுக்க வேண்டும் என்று சூளுரைத்தார். ஒன்று சுதந்திர இந்தியாவில் வாழ்வோம் இல்லையென்றால் சாவோம் என்றார். அடிமைகளாக ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதை விட சுதந்திரனாக ஒருநாள் வாழ்ந்துவிட்டுச் சாகலாம் என்றார். தேனை நாடி வரும் வண்டுபோல சிவாவின் பேச்சைக் கேட்க மக்கள் திரண்டு வந்தனர். சிவாவின் பேச்சை வேதவாக்காக நம்பினர். புயலுக்கு கடலில் இருக்கும் வரைதான் வலு அதிகம்.

வ.உ.சி என்ற வடதுருவமும் சிவா என்ற தென்துருவமும் தூத்துக்குடியில் சந்தித்துக் கொண்டன. தென்னாட்டுத் திலகர் எனப் போற்றப்பட்ட வ.உ.சி திருநெல்வேலி

மாவட்டத்தின் காவல்தெய்வமாக விளங்கினார். அவரின் சுட்டுவிரல் அசைவுக்காக மக்கள் அனைவரும் காத்திருந்தனர். வ.உ.சி தான் மேடையேறிய நிகழ்வுகளிலெல்லாம் சிவாவை முன்னிலைப்படுத்தினார். தனக்கு கிடைத்த வாய்ப்பை தக்க முறையில் பயன்படுத்திக் கொண்ட சிவா வெள்ளையர்களே மூட்டை முடிச்சுகளுடன் தயாராக இருங்கள் என கர்ஜித்தார். சிவாவின் ஆவேச பேச்சைக் கேட்பதற்காகவே பாரதியார் சென்னையிலிருந்து தூத்துக்குடி வந்தார். கூட்டத்தில் சிவாவின் பேச்சைக் கேட்டு மேடையை நோக்கி ஓடிச்சென்று சிவாவை கட்டிப் பிடித்துத் ஆரத்தழுவி இளைஞனே வீரசிவாஜியை உன் உருவில் காண்கிறேன் என்று புகழ்ந்து பாராட்டினார். அக்காலகட்டத்தில் காங்கிரஸ் மிதவாதிகள் தீவிரவாதிகள் என இரண்டாகப் பிளவுபட்டிருந்தது. மிதவாதிகளின் அறப்போராட்டம் வேலைக்கு ஆகாது என்று தீவிரவாதிகள் தீர்மானித்திருந்தனர். மயிலே மயிலே என்றால் இறகு போடாது அடக்குமுறைக்கு ஆயுதத்தின் மூலம்தான் பதில் தர வேண்டும் என்பதில் தீவிரவாதிகள் உறுதியாக இருந்தனர். காந்தியின் தலைமையும் அகிம்சையுமே விடுதலைப் பெற்றுத்தரும் என மிதவாதிகள் நம்பினர். வ.உ.சி சுதேசி கப்பல் கம்பெனியை நிறுவியது ஆங்கில அரசுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது. தூத்துக்குடி ஹார்வி மில்லில் நடந்த தொழிலாளர் புரட்சிக்கு வ.உ.சி தான் காரணம் என ஆங்கில அரசு குற்றம் சாட்டியது.

விடுதலை வானம் வ.உ.சி, சிவா என இரண்டு சூரியன்களைக் கண்டது. மேடையில் இருவரும் சேர்ந்தே சொற்பொழிவாற்றினர். இவர்களை இருவல்லவர்கள் எனவும் இரட்டைக்குழல் துப்பாக்கி எனவும் பத்திரிகைகள் புகழ்ந்தன. ஆங்கிலேய அரசு கிளைகளை வெட்ட வெட்ட விடுதலை விருட்சம் துளிர்த்துக் கொண்டேதான் இருக்கும் என்றெண்ணி வேரோடு சாய்த்துவிட வேண்டும் என முடிவு கட்டியது. அதற்கான சந்தர்ப்பங்களை எதிர்நோக்கி காத்திருந்தது. அரவிந்த கோஷ் என்னும் விடுதலை வீரருக்கு எதிரான வழக்கில் அரசின் சார்பாக சாட்சியம் அளிக்குமாறு வங்காளப் புரட்சியாளர் விபின்சந்திரபாலை ஆங்கிலேய அரசு மிரட்டியது. சந்திரபாலோ சாவேனே தவிர சர்காருக்கு ஆதரவாக சாட்சியம் சொல்லமாட்டேன் என பிடிவாதமாக கூறிவிட்டார். ஆங்கிலேய அரசு அவர்மீது பொய் வழக்கு போட்டு சிறையில் தள்ளியது. ஆறுமாத தண்டனைக்கு பின் விபின்சந்திரபாலை ஆங்கிலேய அரசு விடுலை செய்தது. விடுதலை அடைந்த தியாகி விபின்சந்திரபாலுக்கு விழா எடுக்க வ.உ.சியும் சிவாவும் மற்ற நண்பர்களும் முடிவு செய்தனர். ஊர்வலத்துக்கு அனுமதி அளிக்காமல் ஆங்கிலேய அரசு இழுத்தடித்தது. எவ்வளவோ நெருக்கடிகளுக்கு மத்தியில் திட்டமிட்டபடி தூத்துக்குடியில் விழா சிறப்பாக நடைபெற்றது. அதையொட்டி நடந்த ஊர்வலத்தில் பத்தாயிரம் பேர் கலந்துகொண்டு தூத்துக்குடியையே பிரமிக்கச் செய்தனர்.

தடையை மீறி பேரணி நடத்திய இரட்டையரை கலெக்டர் விஞ்ச் துரை தன்னை வந்து திருநெல்வேலியில் சந்திக்குமாறு தாக்கீது அனுப்பினார். மடியில் கனம் இருந்தால் தானே

வழியில் பயம் இருக்கும் நியாயமோ நம் பக்கம் நாம் ஏன் கோழைகளைப் போல் ஓடி ஒளிய வேண்டும் கலெக்டர் தங்களை எந்த இடத்தில் வந்து சந்திக்குமாறு கூறினாரோ அந்த இடத்திற்கே சென்று சந்திப்பது என இருவரும் முடிவு செய்தனர். இந்த முடிவைக் கண்டு நண்பர்கள் திடுக்கிட்டனர். இது குள்ளநரிகளின் ஏற்பாடு சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்பதைப் போன்றது விஞ்ச் துரையை திருநெல்வேலியில் சந்திப்பது என ஆதங்கப்பட்டனர். எனவே முடிவை மறுபரிசீலனை செய்யும்படி வற்புறுத்தினர். ஆனால் சிவாவும். வ.உ.சியும் தங்கள் முடிவில் உறுதியாக இருந்தனர். அதன்படியே இருவரும் திருநெல்வேலிக்குப் புறப்பட்டனர். இருவரையும் பார்த்த விஞ்ச்துரை கடும்கோபம் கொண்டான். இங்கிலாந்திலிருந்து வரும் பொருட்களை பகிஷ்கரிக்கும்படி மக்களைத் தூண்டிவிடுவது தேசத்துரோகம். சர்க்காரின் ஊரடங்கு சட்டத்தை மீறி ஊர்வலம் நடத்தியது தண்டிக்கப்படவேண்டிய குற்றம். நாங்கள் நினைத்தால் உங்கள் இருவரையும் நாடுகடத்திவிட முடியும். எங்களை மீறி எந்த ராஜ்ஜியம் உங்களுக்கு அடைக்கலம் கொடுக்க முன்வரும். ஆள்வோருக்கு ஒருநீதி அடிமைக்கு ஒருநீதிதான் நாமிருவரும் சரிசமமா என்ன? இந்தியா என்ற தேசத்தை கட்டமைத்தவர்கள் நாங்கள், நாங்களே அதை உங்களிடம் தாரைவார்த்துச் சென்றுவிடுவோமா? கலெக்டரின் ஆணை கடவுளின் ஆணையைப் போன்றது அதற்கு கட்டுப்படாமல் சட்டத்தை மீறிவிட்டீர்க்ள நீங்கள் இருவரும் என்றான்.

விஞ்ச் துரையின் பேச்சைக் கவனமாகக் கேட்ட இருவரும் தேசம் எங்களுடையது நீங்கள் பஞ்சம் பிழைக்க வந்த நாடோடிகள். வாணிபம் செய்ய வந்தவர்கள் கொடுக்கல் வாங்கலோடு நின்றிருக்க வேண்டும். வெள்ளைத் தோலைவிட உங்களுக்கும் எங்களுக்கும் என்ன வித்தியாசம். எங்கள் இனம், மொழி குறித்த வரலாற்றினை நீங்கள் அறிவீர்களா? பூசாரி நன்றாக பூசை செய்கிறான் என்பதற்காக அவனை கடவுளாகத் தொழ முடியுமா? முப்பது கோடி பேரும் ஒன்று திரண்டால் உங்கள் கையிலுள்ள அதிகாரமும் வெள்ளையர் என்ற உங்கள் ஆணவமும் என்னவாகும். நாட்டை எப்படி வழிநடத்துவது என்று எங்களுக்கு நன்றாகவே தெரியும் அதை நீங்கள் எங்களுக்கு கற்றுத்தர தேவையில்லை நீங்கள் மூட்டை முடிச்சுகளோடு கப்பல் ஏறுகின்ற வழியைப் பாருங்கள் என்று பதிலளித்தனர். இருவரின் ஆவேச பதிலைக் கேட்ட விஞ்ச் துரை இருவரையும் கைதுசெய்து சிறையிலடைக்க உத்தரவிட்டான்.

வ.உ.சியும், சிவாவும் கைதானவுடன் பெரும் கலவரம் வெடிக்கத் துவங்கியது. மக்கள் வீதிக்கு வந்து வன்முறை செயல்களில் ஈடுபட்டனர். கலவரத்தை கட்டுப்படுத்தச் சென்ற உதவி கலெக்டர் ஆஷ்துரை கூட்டத்தைக் நோக்கி துப்பாக்கியால் சுட நான்குபேர் ஸ்தலத்திலேயே மாண்டனர். பலர் காயம் அடைந்தனர். கலவரம் மூன்று நாட்களுக்கு பின் கட்டுக்குள் வந்தது. இருவரின் மீதும் ஆங்கிலேய அரசு தேசதுரோக வழக்கு தொடர்ந்தது. நாடறிந்த திருநெல்வேலி சதி வழக்கின் தீர்ப்பு ஜூலை 7ஆம் நாள் வழங்கப்பட்டது.

வ.உ.சியும், சிவாவும் கோர்ட்க்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். நீதிபதி பின்ஹே தான் தயாரித்து கொண்டு வந்திருந்த தீர்ப்பினைப் படிக்கலானார். அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டது, சிவாவுக்கு உதவியது என்ற இரு குற்றத்துக்காக வ.உ.சிக்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. நாட்டின் இறையாண்மைக்கு எதிராக பேசியதற்காக சிவாவுக்கு பத்தாண்டு கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. பின்னர் இது ஆறாண்டுகளாக குறைக்கப்பட்டது. தீர்ப்புக்கு பின்னர் வ.உ.சி, சிவா இருவரும் திருச்சி மத்திய சிறைக்கு கொண்டு செல்லப்பட்டனர். சிவாவுக்கு சிறைவாழ்வு மிகக் கொடுமையானதாக இருந்தது. உரோமம் அடிக்கும் வேலை அவருக்குக் கொடுக்கப்பட்டது. இதனால் சிவா சதா இருமிக் கொண்டே இருந்தார். இருமல் கடுமையாகவே டாக்டர் வந்து பார்த்துவிட்டு இவருக்கு இந்த வேலை ஒத்துவராது வேறு வேலையைக் கொடுங்கள் என்று சிபாரிசு செய்துவிட்டுப் போனார்.

டாக்டரின் சிபாரிசின் பேரில் சிவாவிற்கு எளிதான வேலை கொடுக்கப்பட்டது. மருந்து, மாத்திரைகள், சத்தான உணவு வழங்கப்பட்டது. அதன் பிறகு சிவா சேலம் சிறைக்கு மாற்றப்பட்டார். மீதமிருந்த தண்டனைக் காலத்தை சேலம் சிறையில் கழித்துவிட்டுத் தண்டனைக்காலம் முடிந்து சிவா விடுதலையானார். வெளியே வந்தபோது அவருக்கு தொழுநோய் கண்டிருந்தது. சிறையிலிருந்து வெளியேவந்த சிவா தமிழக இளைஞர்களுக்கு விடுதலை உணர்வை ஊட்ட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு ஞானபானு என்ற மாதப் பத்திரிகையை தொடங்கி நடத்திவந்தார். பாரதியும் ஞானபானு இதழில் அவ்வப்போது எழுதிவந்தார். ஞானபானு இளைஞர்களின் உள்ளத்தில் விடுதலை வேட்கையை கொளுந்துவிட்டு எரியச்செய்தது. இக்கட்டான தருணங்களில் சிவாவிற்கு உறுதுணையாக இருந்தவர் அவரது மனைவி மீனாட்சி. சிவாவின் வலதுகரமாக இருந்து பத்திரிகை வேலையில் பங்கெடுத்து வந்த அவர் நோய்வாய்ப்பட்டு இறந்துபோனார். இந்தப் பெரும் இடியையும் சிவாவின் துறவு மனம் தாங்கிக் கொண்டது. அவருடைய பிரபஞ்சமித்திரன், இந்திய தேசாந்திரி ஆகிய வாரப்பத்திரிகைகள் போதுமான பணவசதி இல்லாததால் வேறுவழியின்றி நிறுத்தப்பட்டது.

போராளி என்பவன் தன்னை வென்றவனாக இருக்கவேண்டும். கொள்கைக்காக தனது வாழ்வை அர்ப்பணித்தவனாக இருக்க வேண்டும். சிவாவின் மூச்சும் பேச்சும் சுதந்திரம் தான். வாழ்வு நிரந்தரமில்லை எனும்போது மக்கி துருப்பிடித்து அழிவதைவிட உடம்பு தேய்ந்து அழிவதே மேலானது. மேம்பட்ட குறிக்கோளுக்காக செய்யும் முயற்சியே முடிவுபெறாத வெற்றி. மரணம் ஒருமுறைதான் அது நாட்டுக்காக இருக்க வேண்டும் என்பதே சிவாவின் எண்ணம். பாரதத்தாயின் தவப்புதல்வர்கள் ஒன்றும் கோழைகளல்ல தாயகத்தைக் காக்க வீறுகொண்டு எழுவார்களேயானால் எந்த அரசும் அவர்களை மரணத்தை வைத்து பூச்சாண்டி காட்டி பயமுறுத்த முடியாது. இதுவே சிவாவின் தாரக

மந்திரம். பாரத அன்னையை வணங்கும் நோக்குடன் பாரத ஆசிரமம் என்ற ஒன்றை நிறுவத் திட்டமிட்டார். அதன் மூலம் இளைஞர்களை ஒன்றுசேர்க்கலாம் என்பதே அவரது எண்ணம். சிவாவின் தேசத்தொண்டும் தேசபக்தியும் பாரதிக்கு நிகரானது. ஆங்கிலேய அரசுக்கு எதிராக தொடர்ந்து பிரசாரத்தில் ஈடுபட்டுவந்த அவர் காரைக்குடியில் சொற்பொழிவாற்றும்போது கைது செய்யப்பட்டார். மதுரை நீதிமன்றம் அரசுக்கு எதிராக பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் பிரசாரம் செய்ததற்காக அவருக்கு இரண்டு ஆண்டு கடுங்காவல் தண்டனையும் ஐநூறு ரூபாய் அபராதமும் விதித்தது. சிவாவிடம் பணமில்லாததால் தண்டனைக்காலம் இரண்டரை ஆண்டுகாலமாக வழங்கப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

தனது மோசமான உடல்நிலை காரணமாக இனிமேல் இந்த உடல் சிறைவாசத்தை தாங்காது என்ற முடிவுக்கு வந்தார். இனிமேல் தாம் தீவிர அரசியலில் ஈடுபடப்போவதில்லை என்று கைப்பட எழுதிக் கொடுத்தார். அந்த நிபந்தனையின் பேரில் அவரை விடுதலை செய்தனர். அவரது நெடுங்கால விருப்பப்படி பாப்பாரப்பட்டியை ஒட்டி பாரதமாதா கோயிலும் ஆசிரமும் நிறுவப்பட்டன. குடும்பத்தைவிட்டு விலகி வந்தவர்கள், நோயாளிகள், நாட்டு விடுதலைக்காக பாடுபடுபவர்கள் அந்த ஆசிரமத்தில் தங்கி தம்மாலான தொண்டு புரியலானார்கள். சிவா எந்தவொரு இக்கட்டான சூழ்நிலையிலும் இது அன்னையின் செயல் நம்மால் ஆவது ஒன்றுமில்லை என சமாதானமடைவார். தேசத்தின் மீது கொண்ட பற்றினால் மற்ற பற்றுக்களை துறந்தவர் அவர். அவர் ஆயுளில் முக்கால்சதவீதம் இந்தியா இந்தியர்களுக்கே என்ற முழக்கத்துடன் ஒவ்வொரு பிரசார மேடையாக பயணப்பட்டுக் கொண்டே இருந்தார். வெள்ளையர்களோடும், நோயோடும், தொழிலிலும் போராட்டம் போராட்டம் போராட்டம் தான். அன்னை சிவாவின் மீளாப்பயணத்தை அறிந்துகொண்டுதான் பாரதபுரத்திற்கு அழைத்துவந்தாள் போலும். 1925ஆம் ஆண்டு ஜூலை 25ஆம் நாளன்று இறையோடு கலந்தார். அத்துடன் அவரது வாழ்க்கைப் போராட்டம் முடிவுக்கு வந்தது.



—

ப.மதியழகன்,
115,வள்ளலார் சாலை,
ஆர்.பி.சிவம் நகர்,
மன்னார்குடி - 614001.
திருவாரூர் மாவட்டம்.
தமிழ்நாடு, இந்தியா ஒன்றியம்.
கைப்பேசி: 9597332952 | பகிரி: 9384251845

# விண்வெளிப்பயணம்

நீண்ட நாட்களுக்குப் பின் வந்த விடுமுறையில்
நீலவானத்துக்கு மாட்டு வண்டியில்
நீந்திச்சென்றேன்
பாதங்களை குத்தின என்ன கற்களா?

இல்லவே இல்லை
நட்சத்திரங்கள்
தோளைத்தட்டின திரும்பிப்பார்த்தேன் மேகங்கள்
அணைத்துக்கொண்டது அதிசய நிலா
அவள் சோறூட்டினாள்
யாரவள்?

என் சின்னம்மா
பருகப்பாலும் தந்தாள்…

சர்க்கரைக் கொஞ்சம் குறைவுத்தான்
ஆனந்த கண்ணீர் விட்டேன்…

அத்தனையும் பனித்துளிகள்
ஒன்பது கோள்களும் ஒருத்தியை வலம் வந்தன…

சிவந்த வாயைக்கொண்ட செவ்வாய்
பிறப்பிலே வெட்கம் கொண்டது போல குனிந்தே நடந்தது…

அதைத்தொட்டு மருதானிச் செய்து
உள்ளங்கையில் தடவிக்கொண்டேன்.

—

மதீரா (பீ.ஏ (R)),
அறிவிப்பாளினி,
செய்திவாசிப்பாளர்,
டப்பிங் கலைஞர்,
இலங்கை.

# உணவால் உயிர் காப்போம்

மனிதன் மனிதம்
இழந்து விட்டான்...

மனதில் உயிர்களை
மறந்து விட்டான்...

பிறரின் பசியைப்
போக்க தயங்குகிறான்...

தானோ ருசியைத் தேடி
அலைகின்றான்...

உணவின் மீதியை
தந்தால் போதுமே...

நித்தம் வீதியில்
உயிர்கள் வாழுமே...

உலகம் போகும்
பாதையினாலே இன்று,
அழகிய வாழ்வை
தொலைத்து விட்டான்...

பிறர் பசியை
வாழ்வில் போக்கிடுவே,
வீண் விரையம்
நாமும் தவிர்த்திடுவோம்...

உலகில் பசியால்
உயிர்கள் அழிகின்றதே,
நமக்கு மனிதம்
இருப்பது புரியலையே...

பிறர் பசியை
போக்கிட நினைத்தாலும்,
சிலருக்கு வாழ்வில்
செல்வம் இருப்பதில்லை...

செல்வம் சிலருக்கு
நிறைந்தே இருந்தும்,
உதவிகள் செய்திட
மனமும் இல்லை...

நிம்மதி தேடியே
அலைகின்றோம் வாழ்வில்,
நிம்மதி என்பது
பிறருக்கு கொடுப்பதிலே...

—

வாழ்வியல் கவி,
சா.நாகூர் பிச்சை,
திண்டுக்கல்.



## கவிக்கூ

சுருட்டியப்பாயில்
மீதமுள்ளது
உறக்கம்

சுதந்திரத்தோடு
நன்றாக பறக்கிறது
பலவண்ணக் கொடி

பார்வையற்றவனை
பாரமாக நினைப்பதில்லை
ஒளி

பசிவோடு நின்று
பசியாற்றி கொள்கிறது
மிதிபட்ட வைக்கோல்

தூண்பிடித்தவளுக்கு
துறவியான கணவன்
பிடிக்கவில்லை

ஒரு சொட்டு நீரில் தாகம் தீர்வதில்லை
பூமிக்கு

தலையில் ஏறிய கணம்
தடுக்கி விழும்பொழுது
காயமாகிறது

தயக்கம் பிறக்கும் பொழுதெல்லாம்
வெற்றி ஓரம் நிற்கிறது

அதிகமான பேச்சுகள்
அவசர புத்தியின்
ஆரம்பம்

தெரியும் தெரியும் என்பதில்
தெரியாமலே போகிறது
உண்மை

சரியான தவறுக்கு
ஒரு கனம் யோசிக்கிறது
மனது

யாரும் இல்லையென
சற்று தூரம் பறக்கிறது
நிம்மதி

சகதி நிரம்பினாலும்
சற்று நின்று பார்க்க செய்கிறது
தாமரை

உலகம் உருண்டையானது
பிடிக்க தெரியாதவன்
கைகளில் பிடியாய்

உண்மையை சொல்
உனது உண்மை
உரக்க கத்தும் வரை

## எங்கள் ஊர் திருவிழா

சாலையெல்லாம் விளையாட்டு
பொம்மைகள் இருந்தபோதும்
வயிறோடு பசி விளையாடிக்
கொண்டுதான இருக்கிறது அந்த யாரும்
அற்ற குழந்தைக்கு....!

கண்ணாடி கடைகளில்
வளையலோடு மின்னுகிறது காதலனின்
கைப்பட்ட வளையல் அணிந்து
குழுங்கச்செய்யும் காட்சி....!

மாரியம்மனும் காளியம்மனும்
ஒன்றோடு ஒன்றோடு பார்த்துக்
கொண்டாளும் உரசாமல் உசாராக
செல்கிறது முட்டாள் வடம் பிடித்த
சாதி....!

ஏதோ ஒருநாள் செய்த தவறிற்று வான
வேடிக்கையை மட்டும் பார்த்து தலை
நிமிர்த்துகிறது, அப்பனின் அறியாத தவறு
அறியா குழந்தை....!

வருடா வருடம் வந்து செல்கிறது...
வாசலோடு சென்று விடுகிறது தெய்வம்
விபுதி பட்டைவரை நிலைத்திருக்கிறது
பக்தி...!

## புத்தனின் மௌனக்கவிதை

இலைகளின் பாதம்
தொட்டு காதம் நகற்றும்
காற்றோடு சிறு காதைகளை
அடிக்கோடிட்டு
மேற்குறியிட்டு மனயம்
செய்துவிட்டு
சற்று ஆன்மிக நெம்புகோல் கொண்டு
காற்றாய்
நகர்த்தி அடிக்கு அடி
எல்லைகளை குத்துக்கல்லாய்
நீரோடை மீதும்
குவியல் நிறைந்த மலை மேடுகளிலும்
யாராலும் நகர்த்த இயலாத
மௌன எடைகளை நகர்த்த முயல்கிறது
ஒரு சொட்டில் வடிந்து எழுத்திகளாய்
படர்கிறது
புத்தனின் மௌனக்கவிதை....

## சருகு படர்ந்த செய்தி

வெளிப்படையான வாழ்வியலில்
நீ உண்மையை குரைத்துக் கொண்டே
சென்றாலும்
குறைந்த பட்ட பொய்களை
சற்று நிரப்பி அளவோடு பயணிப்பது
செய்தி பரவலின் அலாதி சுவாரசியம்....

மனதொடு ஒன்றிய ஒன்றை
விரலோடு உரசி
மனதொடு அலசி
மையிட்டு
ஊற்றி மொழுகிய காகிதங்களில்
அர்த்தங்களின் பரவல்கள்
செய்தி நன்றாகவே பரவட்டுமே....!

## நூல் பொம்மை

நான் கடலின் மேல் நின்று நடனம் புரிய
ஆசைப்பட்டவன்
எனது கால்களில் சிறு கவலை முள்
குத்தியதால்
கைகள் மாறி கால்களின் நடனம் மாறி
புதிய நடனம் பிறப்பித்து விட்டேன்....

இசைதெரியாமல்
காதுகள் அடைக்கப்பட்டு
கண்கள் வண்ணம் பூசப்பட்டு
திறந்த வண்ணமே முகம் சிலிர்த்த
புன்னகைக் கொண்டு
கழுத்தும்
இடையில்
இசையின் நயமும் கொண்டதொரு
தோல் பொம்மை நடனமாய்....

நீலகண்டனின் தொண்டைக்குழியல்
வண்ணம் தடவிய விசம்போல
கண்ணுக்குத் தெரியாத நூல்கொண்டு
கால்களை ஆட்டிவைத்து
ஆடவைத்துவிடுகிறது
வண்ணங்களை முற்றிலும் மறைத்து
வெள்ளை நூலில் தலையென
கையென
காலென
மனதையும் சேர்த்து ஆடிய
வசியப்படுத்தாத
வனப்புடன் வாழ்கின்ற மனிதனாய்
மாறிய
நூல் பொம்மைகள்.....!

## நிரம்பி வழியும் அன்பு

பூட்டிய கதவுகளின்
துவாரத்தின் வழியே
எத்தனை அன்புகள் வெளியேறத்
துடிக்கின்றன...!

பூட்டின் கனத்தில் சிக்கிய சாவியின்
கனமான விடையளிப்பு நேரத்தில்
இதோ
திறந்துவிடப்படுகிறது
யாரோ  விட்டு சென்ற அன்புகளின் ஈர
சுவாசம்....!

நேற்று இரு அன்புகள் அங்கே அமர்ந்து
இருக்கலாம்...
இதயங்களை பரிமாறி இருக்கலாம்...

வாக்கு வாதங்களில் அன்பில் புரிதல்
வழியலாம்
கொஞ்சல்களில் அன்பு நிரம்பி
வழியலாம்.....

ஒரு பூட்டினால் அடைத்து வைத்தும்
துளைகொண்டு இதயம் காண
ஊசித்துவாரத்தையும் கடந்து நிரம்பி
வழிகிறது
யாரோ ஒருவரின் பார்வையில்
ஒரு சகிப்பை உண்டு செய்த
சுவற்றில் குருதியாய்
குத்தப்பட்டு நிரம்பி வழியும்
அன்புகள்.....

—

கவிஞர் சே கார்கவி,
நாகப்பட்டினம்.



# சுதந்திரம்

இன்றொரு நாளது மட்டும்
பொறுத்துக் கொள்வாயா?
மண்வெட்டியும் கடப்பாரையும்
பூஜிக்கப்படுகின்றனவே....!

ஒளிந்திருந்த கயிறும்
சிரித்திருக்கும் கொடியும்
ஒன்று சேர்கின்றன...!
இன்றொருநாள் மட்டும்
பொறுத்துக்கொள்வாயா....?

தோண்டப்படும் குழியொடு
பகைமையும் புதைபட
மீண்டெழுந்து வருவாயா...
மாண்டு போன நாட்களொடு
நீண்டு கொண்டே செல்வாயா?

அணிவகுப்புகள் அசைந்தாட
குழந்தைகளின்
கைதட்டல்கள் துள்ளியெழ
ஆரவாரபேச்சுக்கள்
செவிதனிலே முட்டியெழ
இன்றொரு நாள் மட்டும்
பொறுத்துக் கொள்வாயா?

மேடைகள் சிரித்திருக்கும்
நளினங்கள் நமையழைக்கும்
சின்னதொரு கிள்ளையும்
மென்குரலில் பதுக்கியதை
உரத்து சொல்லி உசிப்பிடுமே
இன்றொரு நாள் மட்டும்
பொறுத்துக்கொள்வாயா....?

பேருந்து
சன்னலோரங்கள்
கிசுகிசுக்கும்...!
கிள்ளைமொழியாய்
துள்ளியெழும்...!
கண்ணாடி பேழைக்குள்
காட்சியான இனிப்புகள்
நாவினிலே உருண்டோட
காத்திருக்கின்றனவே
பொறுத்துக்கொள்வாயா...?

கயிறோடு சேர்ந்த கொடியே...!
வாய்மூடி சுவாசிக்கிறோம்
நிதந்தோறும் உனையே....!
வாய்மூடும் சடங்களல்ல
வாய்பேசா ஊமைகளல்ல...!
பொறுத்துக் கொள்வாயா?

பூக்கள் வாடும் முன்
கொடியேறி பறந்தாடு....!
பூக்களின் நிறங்களில்
எத்துனை ஒளிர்ப்பு...!
கட்டுக்குள் கிடக்கும் பூக்களோ
கைதட்டலில் அதிர்ந்து
உதிரப்போகின்றனவே...!

செங்குருதியில்
பூக்களும் சிவந்து
கதை பேசியதே..!
செவ்வானம் விரிந்தெழ
உதிரும் பூக்களின்
வாசங்களோடு
எழுதப்படுகின்றனவே
இந்தியனென்று....!

தலைநிமிரும் போது
தலைகணங்கள்
இறக்கப்படுகின்றன...!
சுதந்திரம் மட்டும்

பிறக்கத்தான் செய்கிறது
சுதந்திரமாய் பிறப்பது
எப்போது?

நித்தம் நித்தம்
சோறு தின்று ஊண் வளர்த்தாய்
உயிர் வளர்த்த நாமெல்லாம்
உயிர் கொடுக்க வாழ்வாயா
உயிர் சிதைத்து வீழ்வாயா?

கிடைத்ததெல்லாம்
சுதந்திரமென மெனக்கெட்டு
விரிக்கின்றாய் சிறகுகளை...
சிறகொடிந்த கிள்ளைக்கு
எழுதுகோலை கொடு
எழுதி எழுதி பழகட்டும்
தமிழாய் பிறக்கட்டும்...!

இருண்மைமையை வென்றெடுத்த
தினங்களோ வரலாறாய்
பொறிக்கப்படுகின்றன..!
உடைமைதொலைத்து
ஊண்தொலைத்து
உயிர்தொலைத்த
உத்தம உயிர்களே.....!
தேசம் காத்த பொக்கிசங்களை
காத்திடுவோம்...
சுதந்திர சுவாசத்தில்
இந்தியன்என்ற
பெருமையோடு....

—

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

# ஒரே கேள்வி

நீண்ட சடையோடு
மல்லிகையினை
முன்னிட்டு ஆடச்செய்கிறாள்

வட்டமாய் ஒன்றும்
அதன் கீழே செவ்வகமாய் ஒன்றுமென
பொட்டுகளை
சூடியிருக்கிறாள்

பச்சைநிற தாவணிக்கு மேட்சிங்காய் வளையல்
க்ளிப் கம்மல் இன்னபிற
இத்தியாதிகளெல்லாம் இப்பொழுது அவளாம்

வட்ட முகத்தில்
சின்னச்சூரியனாய்
ஒரு மூக்குத்தியோடு
நிற்கிறாள்

டிகிரி டைப்பிங்
சமையல் பாடல்
எல்லாம் மறைந்து
உயரங்காட்ட

'பொண்ணு
கொஞ்சம் கருப்புதான்' என்றவர்கள்
இறுதியாய் ஒரேயொரு கேள்வியோடு
முடித்தனர்...
'எவ்வளவு போடுவீங்க!'

—

ரகுநாத் வ,
மதுரை.

## நகை

எடுத்ததற்கெல்லாம் அழும்
பெண்களுக்கு மத்தியில்
உன்னால் மட்டும் தானடி
எடுத்ததற்கெல்லாம்
சிரிக்க முடிகிறது

சிலரின் இதழ்கள்
திறக்காத பூட்டுகள் போல
எப்போதும் சிரிப்பை உதிர்ப்பதில்லை

சிலர் சிரிக்கும் போது
பற்களைக் காட்டாமல் சிரிப்பார்கள்
தனக்குள் உருளும் முத்தை
வெளிக்காட்டாத சிப்பியைப் போல

எயிறு தெரிய சிரிக்கும்
உன் சிரிப்பிற்கு
விதைகள் தெரிய வெடிக்கும்
வெண்டையின் சாயல்

கூறிய நகைச்சுவை
முடிந்த பிறகும்
மகிழ்ச்சி உதிர சிரிக்கும்
உன் சிரிப்பிற்கு
மழை நின்ற பின்பும் காற்றுக்கு ஆடி
மழைத்துளிகளை உதிர்க்கும்
மரக்கிளைகளின் சாயல்.

—

முூ. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி,
விருதுநகர் மாவட்டம்.

## அறிவுடன் தமிழா விழி! அயலவர் சூழ்ச்சி அழி!!

அறிவை ஆயுதமாக்கி கொண்டு
ஆணவம் கொள்ளும் அயலவரை
தகர்த்தெறி!

இணையில்லை தமிழா உன் தைரியத்திற்கு
ஈகையுடன் தமிழை நீ கற்று
என்றும் பெருமைகொள்வோம் நாம்
தமிழன் என்று!

ஏற்றம் கொண்டு துணிந்து
உயிராக சுமந்து செல்வோம் நம் தமிழை!

ஊண் உதிரத்தில் கலந்து
ஒற்றுமையோடு எதிர்த்து நிற்போம்!

ஓடமாட்டோம் இனி
அயலவர் சூழ்ச்சியை வீழ்த்தாமல்
தூங்கமாட்டோம் இனி!

அயலவர் சூழ்ச்சி தமிழ்நாட்டில்
வெல்லாது இனி!

—

க. பூமணி.

# நண்பன்

கூட பழகுவதற்கு இனியவன்
நிழற்குடையானவன் நண்பன்
அன்னதானம் செய்யும் அன்பன்
ரத்ததானம் கொடுக்கும் தெய்வம்
அன்பு குடை பிடிக்கும் குசேலன்

தேர்வில் அறிவுரை தருவான்
கடற்கரை ஓரம் தோள் அளிப்பான்
வாழ்க்கையில் நம்பிக்கை கொடுப்பான்

எதற்கும் வரம்பு உண்டு
யாரும் இடையே தடையில்லை
தோழன் இருக்க கவலையில்லை
நட்புக்கு எல்லையில்லை

பல நேரங்களில் நல்லவன்
சில நேரங்களில் கெட்டவன்
தேர்வு செய்யும் போது அக்கறை
பழகும் போது கவனம் தேவை

# முயற்சிக்கு எல்லைகள் இல்லை

காண வேண்டும் புதிய கனவு
அக்னி சிறகுகள் விரித்தால் நனவு
வானில் நோக்கி பறந்தால் நிலவு
வாழ்க்கையில் மறக்க முடியாத நினைவு

தைரியம் இருந்தால் முன்னோட்டம்
வெற்றி பாதை பின்னோட்டம்
தேடல் ஆராய்ச்சி கண்ணோட்டம்
விடாமுயற்சி செய்தால் முன்னேற்றம்

தமிழக தென்கோடி பிறப்பு
குடியரசு தலைவர் பதவி வகிப்பு
விருதுகள் வாங்கி குவிப்பு
திறமைக்கு அங்கீகாரம் மதிப்பு

தினந்தோறும் புதிய முயற்சி
புதிய விசயத்தை ஆராய்ச்சி
வாழ்க்கையில் ஏற்றம் மலர்ச்சி
வெற்றி நோக்கி வளர்ச்சி

ஏழ்மையில் மேன்மை சோதனை
செல்லும் வழியில் வேதனை
ஏவுகணை தொழில்நுட்ப சாதனை
இளைஞர்கள் வழிகாட்டி போதனை

சிகரம் தொட வேண்டும் கோரிக்கை
திரும்பி பார்க்க வைத்தது உலகை
எளிமையாக பேசி வாழும் வாழ்க்கை
புகழ் வெற்றி பெறுவதே நம்பிக்கை

—

எஸ்.வீ. ராகவன்,
சென்னை.

# பட்டினப்பாலை காட்டும் தமிழரின் வணிக வீதியும், விளம்பர உத்தியும்...



திறவுகோல் வாசகர்களுக்கு அன்பின் வணக்கங்கள்.பட்டினப்பாலை பற்றி ஒவ்வொரு மாதமும் பார்த்து வருகிறோம். ஏன் இந்த சங்க இலக்கியங்களைப் படிக்க வேண்டும்? இதன் மூலம் எங்களுக்கு என்ன நன்மை விளையப் போகிறது? என்று நீங்கள் நினைக்கலாம். நாம் கற்கும் ஒவ்வொன்றும் வீணாக பயன்படாமல் ஒருபோதும் போவதில்லை. அது எப்பொழுது, எங்கே பயன்படும் என்பதுதான் நமக்கு தெரியாது.

இன்று "தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!" என்று மார்தட்டிக் கொள்ளும் ஒவ்வொரு தமிழருக்கும் தமிழர் வரலாறும் அதன் மரபும் ,தொன்மையும் நிச்சயமாக தெரிந்திருக்கவேண்டும். தமிழரின் வாழ்வியலை தொன்மையை அறத்தை காட்டும் காலக் கண்ணாடி தான் சங்க இலக்கியங்கள். அந்த சங்க இலக்கியங்களில் ஒன்றாக விளங்கும் பட்டினப்பாலையில் கூறப்பட்டிருக்கும் கட்டிட அமைப்பு பற்றியும், தமிழரின் கட்டிடக்கலை திறமைபற்றியும், விழாக்கள் மற்றும் தெருக்கள் பற்றியும் இவ்வாரம் பார்க்கலாம்.

சென்ற இதழில் சுங்கச்சாவடி பற்றியும் அந்த சுங்கத் துறை இருந்த காவிரி கரையோரம் நிகழ்ந்த இடைவிடாத சுங்கச் சோதனை நடவடிக்கைகளையும் பற்றி பார்த்தோம். அந்த சுங்கச்சாவடி அருகே அங்கே வணிகம் புரியும் வணிகர்களின் மாளிகைகளும் தெருக்களும் எப்படி இருந்தன என்பது தான் பின்வரும் வரிகள் விளக்குகின்றன

குறுந் தொடை நெடும் படிக்கால்
கொடுந் திண்ணை, பல் தகைப்பின்,
புழை, வாயில், போகு இடைகழி,
மழை தோயும் உயர் மாடத்து
சேவடி, செறி குறங்கின்,
பாசிழை, பகட்டு அல்குல்,
தூசு உடை, துகிர் மேனி,
மயில் இயல், மான் நோக்கின்,
கிளி மழலை, மென் சாயலோர்
வளி நுழையும் வாய் பொருந்தி,
ஓங்கு வரை மருங்கின் நுண் தாது உறைக்கும்
காந்தள் அம் துடுப்பின் கவிகுலை அன்ன,

*செறி தொடி முன்கை கூப்பி, செவ்வேள்*
*வெறி ஆடு மகளிரொடு செறியத் தாஅய்,*
*குழல் அகவ, யாழ் முரல,*
*முழவு அதிர, முரசு இயம்ப,*
*விழவு அறா வியல் ஆவணத்து 158*

*மூட்டைகள் அடுக்கிக் கிடக்கும் பகுதியை அடுத்து வணிக வீதியில் அமைந்துள்ள மேகத்தைத் தொடுகின்ற உயர்ந்த மாடி வீடுகள். அதற்கு வளைந்த தாழ்வாரம் இறக்கிய வளைந்த திண்ணையும் பல தடுப்புகளும் பெரிய வாயில்களும், வாயிலிலிருந்து மாளிகைக்குச் செல்லும் நீண்ட உட்பகுதியும் அமைந்திருக்கும். திண்ணைக்கு ஏற ஒன்றற்கொன்று நெருக்கமாக தொடர்ச்சியாக அமைந்த நீண்ட சிறுசிறு படிக்கட்டுகள். மேல்மாடி வீட்டுக்கு நுழைந்தேறக் குகை போன்ற வாயில்.அதன் வழியே ஏறிச்சென்றால் போகிடைக் கழி. இது அதற்கு வழி நுழையும் வாயில்.இவ்வாறு கட்டப்பட்ட மேகத்தை தொடும் மாட மாளிகைகள் கொண்டதாக செல்வச்செழிப்புள்ள வணிகர்கள் இல்லங்கள் விளங்கின என்பதனை அறியத்தருகின்றது பட்டினப்பாலை.*

*அத்தகைய உயர்ந்த மாளிகையின் மேல் மாடத்தில் மகளிர் குரவை விளையாடும் காட்சி தெரிகிறது. சிவந்த பாதங்களையும், நெருங்கிய தொடைகளையும், பசுமையான தழையாடை மூடிப் பகட்டிக்கொண்டிருக்கும் அல்குல்களையும் அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட பொலிவுடன் விளங்கும் அடி வயிற்றினையும், மெல்லிய ஆடை அணிந்த பவளம் போன்ற மேனியையும், மயிலின் தோற்றத்தையும், மானின் மருண்ட பார்வையையும், கிளி போல கொஞ்சிப் பேசும் மழலை மொழியையும் உடைய அமைதியும் அழகும் நிறைந்த பெண்கள் காற்று நுழைகின்ற வழியினைப் பொருந்தி நின்றிருந்தனர். நெருக்கமாக வளையல்கள் அணிந்து அப்பெண்கள், உயர்ந்த மலையின் பக்கத்திலே நுண்ணிய மகரந்தத்தினை உதிர்க்கும் காந்தள் மலரின் துடுப்பு போன்ற அழகிய மடல்கள், கவிழ்ந்து கொத்தாக இருப்பதைப் போல , முன்கையினைக் கூப்பி வீதியில் நடைபெறும் வெறியாட்டு விழாவினைக் கண்டு முருகனை வழிபட்டனர். அது மலைமுகட்டில் மலர்த் தாதுகளைக் கொட்டிக்கொண்டு கொடியோடு கூடிய காந்தள் பூ காற்றில் ஆடுவது போல் இருந்தது. முருகனுக்காக வெறியாடல் என்ற விழாவினை நடத்திக் கொண்டிருக்கும் மகளிர் பாடும் இசையோடு பொருந்தி புல்லாங்குழல் இசைக்க, யாழ் மெல்லிய ஓசையினை எழுப்ப, மத்தளம் முழங்க, முரசு ஒலிக்க விழாக்கள் என்றும் நீங்காத விழாக்களைக் கொண்ட அகன்ற அங்காடித் தெருவினை உடையது காவிரிப்பூம்பட்டினம்.*

*தமிழீழம் மற்றும் தமிழகத்தின் தேசிய மலராக செங்காந்தள் மலர் இருப்பதின் காரணம் இப்போது புரிகிறதா? தமிழரின் வாழ்வியலில் இன்றியமையாத ஒரு மலராக சிவந்த நிறம் கொண்ட அந்த செங்காந்தள் மலர் இருந்திருக்கின்றது என்பதை என்பதற்கு பட்டினப்பாலையும் சான்று பகர்கின்றது. இன்று நடைபெறும் முருகப்பெருமானின்*

திருவிழாக்களில் பின்பற்றப்படும் பல்வேறு விடயங்கள் எங்கிருந்து வந்தது அதன் தொன்மை என்ன அதன் மரபு என்ன என்று பிரமிப்பை ஏற்படுத்துகின்றது மேற்கண்ட அடிகள்.

விளம்பரங்கள் பொருள்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் உறுதுணையாக அமைந்துள்ளன. கடையில் விற்கப்படும் பொருள்களைப் பற்றி மக்கள் அறிந்து கொள்வதற்கு விற்பனையகங்களின் முன்பு பொருள்கள் குறித்த விளம்பரப் பெயர்ப் பலகைகள் வைப்பர். அதனைப் பார்த்து மக்கள் தமக்குத் தேவையான பொருள் எங்கு உள்ளதோ அங்கு சென்று வாங்குவர். பொருள்களைப் பற்றிய விபரங்களை அறிந்து கொள்வதற்கு இவ்விளம்பரப் பெயர்ப்பலகைகள் பயன்படுகின்றன. இவ்விளம்பரப் பலகைகள் தொன்றுதொட்டு பல்வேறு வடிவங்களில் தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சங்க காலத்தில் வணிகத்தில் உயர்ந்த நிலையை அடைந்திருந்த தமிழர்கள் இடையிலும் விளம்பரங்களைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்தமை நோக்கத்தக்கது. பொருள்களைக் குறித்த விபரங்களைத் தெரிவிப்பதற்காகவும், வெவ்வேறிடங்களில் நடக்கும் விழாக்கள், ஒருவருடைய வெற்றிகள் ஆகியவற்றை மற்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக விளம்பரப் பலகைகளுக்குப் பதிலாகக் கொடிகளைப் பயன்படுத்தினர். பத்துப்பாட்டிலக்கியங்களான மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை ஆகியவற்றில் இவ்விளம்பரங்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

கொடிகளின் அடையாளத்தைக் கொண்டே பல இடங்களையும், நிகழ்ச்சிகளையும் பண்டைக் காலத்தில் மக்கள் தெரிந்து கொண்டனர். தற்போது கொடிகளுக்குப் பதில் விளம்பரப் பலகைகளை நாம் பயன்படுத்துகின்றோம். அக்காலத்தில் இதற்குப் பதிலாக கொடிகளையே பயன்படுத்தி வந்தனர்.

பண்டைக் காலத்தில் கொடிகளை விளம்பரக் கருவிகளாக கொண்டிருந்தனர்.கோவிலில் ஏற்றப்பட்ட கொடிகள் மலர் அணிந்த கோயில் வாசலிலே வாசலிலே பலரும் தொழும்படி தெய்வத்தை ஆவாகனம் செய்து கொடி ஏற்றப்பட்டிருந்ததை,

மையறு சிறப்பின் தெய்வம் சேர்த்திய
மலர் அணி வாயில் பலர்தொழு கொடியும் **159-160**

எனப் பட்டினப்பாலை எடுத்துரைக்கிறது. இத்தகைய கொடிகள் எப்பொழுதும் கோயிலில் கட்டப்பட்டு பறந்து கொண்டிருக்கும். இவை கோவில்கள் உள்ள இடங்களைப் பற்றி பிறர் தெரிந்து கொள்வதற்காக ஏற்றப்பட்ட கொடிகளாகும்.

*திருவிழாக்களைத் தெரிவிப்பதற்காக அரிசிப் பலியிட்டு வணங்கி, நீண்ட மரச் சட்டங்களில் கொடியைக் கட்டி உயரத்திலே பறக்கும்படி நாட்டியிருக்கின்றனர். அவை வெள்ளைத் துணியாலான கொடிகள் ஆகும். திருவிழாவிற்காக ஏற்றப்பட்ட இக்கொடிகள் கரும்பு பூத்தது போன்று நெருக்கமாகக் காணப்பட்டதை,*

*வருபுனல் தந்த வெண்மணல் கான்யாற்று*
*உருகெழு கரும்பின் ஒண்பூப்போலக்*
*கூழுடைக் கொடு மஞ்சிகைத்*
*தாழுடைத் தண்பணியத்து*
*வால் அரிசிப் பலிசிதறிப்*
*பாகு உகுத்த பசு மெழுக்கில்*
*காழ் ஊன்றிய கவிகிடுகின்*
*மேலூன்றிய துகிற் கொடியும்* ***161-168***

*என்று பட்டினப்பாலை நவில்கிறது.*

*பட்டி மன்றங்களில் ஏற்றப்பட்ட கொடிகள் கல்விக் கேள்விகளில் வல்லவர்கள் முன்னையோர் முறையினின்றும் வழுவாதவர்கள், நல்ல ஆசிரியர்கள். நாங்கள் எதையும் விவாதிக்க வல்லவர்கள். உண்மையை நிலைநாட்டப் பின்வாங்க மாட்டோம். எவரும் எங்களுடன் வழக்கிடலாம் என்பதைத் தெரிவிக்க கொடிகளை நாட்டியிருக்கின்றனர். இது அறிஞர்கள் சபைக்கு மேல் கட்டப்பட்டிருக்கும் கொடியாகும். இத்தகைய கொடிகள் பட்டிமன்றங்களில் பறந்துகொண்டிருப்பதை,*

*பல்கேள்வித் துறைபோகிய*
*தொல்லாணை நல்லாசிரியர்*
*உறழ்குறித்து எடுத்த உருகெழு கொடியும்* ***169 -171***

*என கடியலூர்உருத்திரங் கண்ணனார் காட்சிப்படுத்துகின்றார்.*

*கப்பல்களில் கட்டப்பட்டிருந்த கொடிகள் காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள துறைமுகத்தில் பல கப்பல்கள் நங்கூ நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவை கட்டுத்தறியை அசைக்கின்ற யானைகளைப் போன்று காட்சியளிக்கின்றன. அக்கப்பல்களின் பாய் மரங்களின் மேல் கொடிகள் பறந்து கொண்டிருக்கின்றன என்பதை,*

*வெளில் இளக்கும் களிறுபோலத்*
*தீம்புகார்த் திரை முன்துறை*
*தாங்கு நாவாய்த் துவன்றிருக்கை*

*மிசைக் கூம்பின் நசைக் கொடியும் 172 -175*
*என பட்டினப்பாலை எடுத்துரைக்கிறது.*

*மீனையும், இறைச்சியையும் துண்டுகளாக்கி அவற்றை நெய்யிலே பொரிக்கின்ற ஓசை நிறைந்த முற்றம். இந்த முற்றத்திலே பலரும் புகும்படியான வாசற்படியில் மணலைக் குவித்து மலரைச் சிந்தி கள்விற்பனை செய்யப்படுகிறது என்பதை அறிவிக்கும் கொடியைக் கட்டியிருக்கின்றனர். காவிரிப்பூம்பட்டினத்தில் காணப்பட்ட இக்காட்சியை,*

*மீன் தடிந்து விடக்குஅறுத்து*
*ஊன் பொரிக்கும் ஒலிமுன்றின்*
*மணல்குவைஇ மலர் சிதறிப்*
*பலர் புகுமனைப் பலிப்புதவின்*
*நறவுக்கொடைக் கொடியோடு 176-180*

*எனப் பட்டினப்பாலை விவரிக்கிறது.*

*காவிரிப்பூம் பட்டினத்திலும் இவ்வாறு பல்வேறு கொடிகளும் கலந்து காணப்படுகின்றன. அவைகள் பல்வேறு வடிவங்களாக அமைந்தவை. சூரியனுடைய கதிரும் நகரத்தில் நுழைய முடியாதவாறு அக்கொடிகள் நெருங்கியிருந்து நிழல் செய்து கொண்டிருக்கின்றன. இத்தகு காட்சியை,*

*பிறபிறவும் நனி விரைஇப்*
*பல்வேறு உருவின் பதாகை நீழல்*
*செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பின் 181 -183*

*எனப் பட்டினப்பாலையின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.*

*காவிரிப்பூம்பட்டினம் ஆகிய நகரங்களின் வணிகம் மற்றும் பிற சிறப்புக்களை கொடிகளை வைத்துப் கடியலூர்உருத்திரங் கண்ணனார் எடுத்துக்காட்டியிருப்பது சிறப்பிற்குரியதாகும். காவிரிப்பூம்பட்டினத்தின் செல்வச் சிறப்பினை, செழுநகர் எனும் சொல் மூலம் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகிறார். கொடிகள் பண்டைக் காலத்தில் விளம்பரக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டமையை இவ்விரு பட்டினப்பாலையின் வாயிலாக அறியலாம். இன்று நிர்வாக திறமை, நிர்வாக மேலாண்மை, நிர்வாக உத்திகள் என்று மேலை நாடுகளில் கற்பிக்கப்படும் நிர்வாகத்துறை கல்வி, எழுதப்படும் புத்தகங்கள், அதில் கூறப்பட்ட அனைத்து, நிர்வாக திறமைகளும் தமிழரின் தொன்மையான வாழ்வியலில் இருந்ததை மேற்கண்ட வரிகள் மூலம் காணக் கிடைக்கின்றது. தொழிலுக்கு விளம்பரம் எவ்வளவு முக்கியம். அதை அன்றே சிந்தித்து செயலாக்கிய தமிழரின் நுட்பத்தை*

என்னவென்று சொல்வது.

அதைப்போல இன்று இவ்வுலகமே ஆண்டவர் என்று சொல்லக்கூடிய கூகுள் எங்கு செல்வதற்கும் வழி சொல்கிறது, எதையும் கண்டுபிடிப்பதற்கு வழியமைத்துக் கொடுக்கிறது என்று பெருமைப்படுகிறோம். அன்றே அந்தந்த இடங்களை சரியாக அடையாளம் காண்பதற்கும் தெரிந்து கொள்வதற்கும் விளம்பரப்படுத்துவதற்கும் கொடியை அடையாளமாக பயன்படுத்திய எமது முன்னோர்களை எண்ணி வியக்கவும் பிரமிக்கும் வணங்கவும் தோன்றுகிறது.

இதுவரை நேரம் ஒதுக்கி பட்டினபாலையை பருகிய திறவுகோல் வாசகர்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த பேரன்பின் நன்றிகள். மீண்டும் அடுத்த மாதம் பட்டினபாலை எதைப்பற்றி கூறப் போகிறது என்பதை பார்க்கலாம் நன்றி வணக்கம்.

—

இளவரசி இளங்கோவன்,
மொன்றியல், கனடா.

---



## அவளும் நானும்

நெடு நாளுக்கு பிறகு அந்த பிம்பத்தை
காண்கிறேன்..!
ஏதோ ஒன்று குறைவாகி இருந்தது..!

வகிடெடுத்த முடியைக் காணவில்லை..!
விடாமல் பெண்ணியம் பேசும் அந்தக் குரல்
கம்மிப் போயிருந்தது..!

இமைமுன் நிழலாடிய அந்த மௌனத்தில்
ஓராயிரம் ரணங்கள் சிறைப்பட்டிருந்தது..!

- அவளும் நானும்

—

கவிமலர் த.சரண்யா,
கோவை

# அறம் பாடும் கவிஞர்




*நூல்: சூடாத பூக்கள்*
*ஆசிரியர்: சா. கா. பாரதிராஜா*
*விலை: ரூ.150/-*

*கவிஞர் தாம் கற்ற கல்வி அனைத்தையும் கவிதையாக்கி இருக்கிறார். தமிழ் இவரது கரம் பற்றி துள்ளி குதித்து விளையாடி ஆற்றொழுக்க நடைப்பயின்றிருக்கிறது. சமூக அவலங்களைக் காணும் போதெல்லாம் பொங்கி எழுந்து அறம் பாடி இருக்கிறார் கவிஞர் சா. கா. பாரதிராஜா அவர்கள். சூடாத பூக்கள் தொகுப்பில் உள்ள கவிதைகளுக்கு விமர்சனம் எழுதினால் இரண்டு புத்தகங்களைப் போட்டு விடலாம். அந்த அளவிற்கு சொல் அடர்த்தியும், கருத்தாழமும் கொண்டவை.*

*"பறை" என்ற கவிதையில் சாதியின் அடையாளமா? என்ற பிரம்மாஸ்திரத்தை ஏவி அடுத்த வரியில் தமிழினத்தின் ஆதி அடையாளம் என்பதை விடையாக பகிர்ந்த நேர்த்தி மிக அருமை. மனித இனத்தைப்போல் இங்கு இசைக்கூட தீண்டத்தாகதது என்ற வரி வாசிக்கும் கண்களை விரியச்செய்கிறது.*

*"பறை இசை*
*கடவுளும் கேட்கவில்லை*
*கடைசியாய் போகிறவனுக்கும்*
*கேட்பதில்லை*
*ஆகா! மெய்சிலிர்க்க வைக்கிறது.*
*"பறை இடிமுழக்கம்*

*சூடாத பூக்களில் முதிர் கன்னிகளின் அவலம், வரதட்சணை கொடுமைகளைச் சுட்டிக்காட்டும் கவிஞர் தம் கவிதைத் தொகுப்பிற்கு சூடாத பூக்கள் என்ற தலைப்பிட்டு அறம் சூழ் கருத்துக்களை வாசிப்பவர்கள் மனதில் விதைத்துள்ளார்.*

*இதில் ஏராளமான கவிதைகள் இருப்பினும் வாசகராய் எனக்கு மிகவும் பிடித்த கவிதை "எச்சில் வீடு" சாதரணமாக சிலந்தியைப் பற்றி கவிதை எழுத நினைத்தால் என்ன எழுதி விட முடியும் என்றுதான் எல்லோருக்கும் தோன்றும்.*

*கவிதையில் கணிதம், அறிவியல், மனிதம், மூடநம்பிக்கை, பொறியாளன் என்ற*

கோணங்களில் பரிணாம வளர்ச்சி கண்டிருக்கிறது சிலந்தி. நீங்கள் மட்டும் இதைப்படித்தால் இனி யாரும் சிலந்தியை தாழ்வாகப் பார்க்க மாட்டீர்கள். சிலந்தி சார், சிலந்தி ஐயா, மாண்புமிகு என அழைக்கத்தோன்றும்.

கவிஞர் கண்ணில் பட்டதையெல்லாம் கவிதையாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார். வானம், குளம், நீர், புயல், பட்டம், மிதியடி,செருப்பு,ரோஜா, தலைவர்கள் என நீளும் பட்டியல்.

உயிர் காக்கும் தேவதைகள், மாண்டு போகும் மனிதம், புலம் பெயர் தொழிலாளர்கள் போன்றவைகள் கொரானா காலக்கட்டத்தை நினைவுப்படுத்துகின்றன.

இலக்கியம் என்பது காலநிகழ்வுகளை தெளிவாக க்காட்டும் கண்ணாடி தானே கொரானா காலக்கட்டத்தை தெளிவாக படம் பிடித்து காட்டியிருக்கிறார். உலகம் உள்ள மட்டும் தமிழ் இலக்கியம் தங்களை வாழ்த்திக்கொண்டே இருக்கும் கவிஞர் அவர்களே.

அதேப்போல் வெளுத்துப்போன வெள்ளாடைகள் என்ற கவிதையில் அரசியல் ஊழலைச் சாடியிருக்கிறார். மக்களே சட்ட நாடாளுமன்றங்களில்"திருடர்கள் ஜாக்கிரதை" என்ற சொல்லாடல் சிறப்பு.

தொடரும் வன்கொடுமை பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் காலம் தோறும் தொடர்கதையாக நீளுவதால் தொடரும் வன்கொடுமை என்ற தலைப்பு மிகப் பொருத்தம்.

மகள் ஒரு வரம் என்ற கவிதையில் மகளின் அன்பையும், தாயின் உணர்வுகளையும் ஆனந்த யாழாக மீட்டிருக்கிறார் கவிஞர் சா.கா. பாரதிராஜா அவர்களின் மூன்றாவது புதுக்கவிதை தொகுப்பு இந்த சூடாத பூக்கள் ஒவ்வொரு தொகுப்பையும் சமூகத்தின் கரங்களில் புது மலராக கொண்டு வந்து சேர்ப்பதில் அவரின் பங்கு அளப்பரியது. வாருங்கள் அனைவரும் படித்து மணம் பரப்புவோம்.



நூல் வேண்டுவோர் தொடர்பு கொள்க:
சா. கா. பாரதி ராஜா,
கைப்பேசி: +91 9944315732

—

நூல் விமர்சனம்:
பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.

# காதல்...

காதலே நீ கடலானாய் அதில் நான்
கலனானேன் !

காதலே நீ விதையானாய் அதன்வழி
வரும்
நான் வேரானேன் !

காதலே நீ கவியானாய் கவிதையில்
பிறக்கும்
நான் கருவானேன் !

காதலே நீ துணையானாய் துணையை
இணைந்த
நான் உறவானேன் !

காதலே நீ தாயானாய் மடிமீது துயிலும்
நான்
சேயானேன் !

காதலே நீ பறையானாய் அதிலிருந்து
வெளிவரும் நான்
இசையானேன் !

காதலே நீ ஓவியமானாய் உனைத்தீட்டும்
நான்
தூரிகையானேன் !

காதலே நீ நிலவானாய் உனதருகில்
உலவிடும் நான்
ஒளிப்பூவானேன் !

உள்ளம் உறவு கொண்டாடும்
கள்ளமில்லா காதலே

எண்ணம் நிறைந்து இனிமை தந்தோடும்
வண்ணம் கொண்ட காதலே

இருமனங்களின் இன்பசுரம் நீ

இரு இனங்களின் ஆசை வயம் நீ

உன்னைத் தொடாமல் எந்த காவியமும்
முற்றுபெற்றதில்லை

கன்னம் தொடாமல் எந்த காதலனும்
வெற்றி பெற்றதில்லை

தென்றலாய் வருச்சென்று தேனாற்றில்
முகம் பதித்து

அன்றிலாய் அலைந்து செல்லும் காதலே
உனக்கு என்
அன்பு முத்தங்கள் ஆயிரமாயிரம்...

—

**ச.வாசுதேவன்,**
(நடுநாட்டுத்தமிழன்),
முதுகலை தமிழ் முதலாம் ஆண்டு,
இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

# பற்றி எரியும் காடு

வெந்து தணியா நாடு
அன்று உப்பு வரிக்கு திமிறி எழுந்த கூட்டம்
இன்று அரிசி வரிக்கு வாய் மூடி அழுகிறது
நின்றால் வரி
நடந்தால் வரி
உண்டால் வரி
உறங்கினாலும் வரி
செத்தாலும் வரி
மூச்சு விட்டாலும் வரி
மணமானாலும் வரி
பிணமானாலும் வரி
வாழ வக்கற்றுப் போனாலும்
வரி கொடுத்துவிட்டு செத்துத் தொலை என்கிறது...
நாட்டை விற்றுத் தின்னும் நாசகார அரசு!

பன்மை பூக்கும் மண்ணில்
ஓர்மை அபத்தம் அல்லவா?
சனாதனத்திற்கு சாமரம் வீசி
மநுவாதத்திற்கு சேவகம் செய்து
தீட்டு அரசியலைத் தோளில் சுமந்து
வெறுப்பை விதைக்கும் ஒரே அக்கப்போர் செய்யும் வெறிபிடித்த மிருகங்களே!
ஒரே நாடு ஒரே சாதி என்று
ஓங்கி உரத்து கூவ முடியுமா?

மாற்றானிடம் மண்டியிட்டு உயிர் பிச்சையுடன் பிழைப்பூதியம் பெறுவதல்ல...
தூக்குக் கயிறானாலும் முத்தமிட்டு வீரமரணம் அடைவதே உண்மையான தேசபக்தி!

மகாத்மாவைச் சுட்டுக் கொன்ற தோட்டாக்கள் இப்போது அரசியலமைப்பு சட்டத்தைச் சுட்டுக் கொண்டிருக்கின்றன...

பிணங்களை வைத்துக்கொண்டு அரசியல் செய்து வரும் அவலம்

நீதி நூலளவில் என்றாவது வேறுபட்டால் பரவாயில்லை
எப்போதுமா வேறுபடும்?

நாடு முழுவதும் விதைத்து வளர்க்கப்படும் நாக்பூர் நச்சுவிதைகள்

மணியடித்தல்
விளக்குப் பிடித்தல்
கைத்தட்டுதல்
உருண்டு புரளுதல்
மூக்குச் சிந்துதல் என
பொய்யான போலியான தேசபக்தி வரிசையில் இந்த முறை
கொடி நடுதல்!

ஒருவழியாகக் கொடி போர்த்தி மறைக்கப்பட்டுவிட்டது...
ஊழல்களும் ஊதாரித்தனங்களும்!

சாமானியனுக்கு எப்போதும் விலையில்லாமல் கிடைக்கும்
விடுதலை நன்னாளில்
கொஞ்சம் தேசப்பற்றும் ஒரிரண்டு ஆரஞ்சு மிட்டாய்களும்!

இப்போது
வயிற்றில் ஈரத்துணிக் கட்டிக்கொண்டு வரி கட்டி எஞ்சியிருக்கும் பிடிச்சோற்றுக்கான
காசு கொடுத்து வாங்கிய தேசபக்தி விடாப்பிடியாக இறுக்கிக்
கட்டப்பட்ட கொடிக் கம்பத்தில்
விட்டு விடுதலையாகிப் பறத்தல்
வேண்டி கதறிக் கொண்டிருக்கிறது!...

—

அமுதாராம்,
மன்னார்குடி.

அட்டைப்பட உதவி:
**நிவேதா ராஜகோபால்,**
6ம் வகுப்பு,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
பரவாக்கோட்டை.

# பெண்மையைப் போற்றுவோம்...!

திருமணத்தின் அன்றிரவே...!
மனதாலும்,உடலாலும்
இணைந்த நிமிடங்கள்...!
வலிதான் எனினும் சுகமே ....!?
ஆனால் ....
அதற்கு பிறகு...?
சுகம் இழந்து வலி மிகுந்தது..
வாழ்க்கை முழுவதும்....!?

சூரிய உதயம் முன் எழுந்து ....
குளித்து ..,.
கணவருக்கு காபி போட்டு ..!
அவனை எழுப்பி தந்துவிட்டு....!
குழந்தைகளை எழுப்பி...
காபி தந்து...!
படிக்க வைத்து...?
காலை சிற்றுண்டி செய்து...!
அவர்களுக்கு ஊட்டி....!
மதிய உணவும் கொடுத்து...
பள்ளி பேருந்தில் ஏற்றிவிட்டு...!
கணவனுக்கு காலை உணவு
பரிமாறி....?
அலுவலகம் வழியனுப்பி வைத்து...!
வீட்டில் நுழைந்து...
வீடு பெருக்கி.....!
கொல்லைப்புறம் நுழைந்து...
பாத்திரங்கள் கழுவி...!
மதிய உணவு சமைத்து....!
அயர்ந்து உட்காரும் போது...?
பள்ளியில் இருந்து
குழந்தைகள் வர...!
அவர்களுக்கு முகம் கழுவி...
தேநீர் கொடுத்து....!
வீட்டுப்பாடம் சொல்லி....!?
கணவன் வந்ததும்...
அவனை உபசரித்து...!
இரவு சமையல் செய்து...
குழந்தைகளுக்கு ஊட்டி....!
கணவரை சாப்பிட வைத்து...!
குழந்தைகளை தூங்க வைத்து....?
கணவனின் தேவையை நிறைவேற்றி...!?
படுத்து அயர்ந்து தூங்கும் முன்...!
அடுத்த நாள் அதிகாலை.....!?
எங்கே சுகம்....!
இங்கே பெண்ணிற்கு...!
எல்லாமும் வலியே....!?
பெண் வலி உணர்வோம்...!
பெண்மையைப் போற்றுவோம்....!?

—

முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



### 1.
## நீர் மிதக்கும் குளத்தில்

படைதிரளும்
நடை எறும்புகள்
அடைகாத்து
விடையளிக்கின்றன
குடையாய் வரும் மரக்காளான்கள்
உடை தேடியலைகின்றன
காடைக் கூட்டங்கள்
கடை மடை வருகின்றன
கூடைக்குருவிகள்
ஓடைக்கரை சேர்கின்றன
சடைப்பிடித்த
கொடை மன்னன்
தடையை உடைத்து
ஊர்நடை போடுகின்றான்
வாடைக் காற்றில்
கோடை தறிக்கும் வெயிலில்
தாடையாடுகிறது
தன்னந்தனியாக...

### 2.
## கிழிந்த சேலை

அலங்கரிக்கிறது
சாலயோர வீடுகள்...

கிளை முறிவால்
வீடு தேடிப்பறக்கிறது
நந்தவனத்துப் பறவைகள்...

### 3.
## கெழமேற்குச் சரிவில்

கீற்றசைக்கும்
தொடுவானத்தில்
இறகொடிந்த தும்பியாய்
அரை நிர்வாணமாய்
தரை தட்டிய படகாய்
கிளைபெருத்த கணுவாய்
மீண்டும் மீண்டும்
பொதிந்து வரும் நுரையாய்
மீச்சிறு பயணத்தில்
கட்டற்ற வெளியை
கட்டியணைத்து செல்கிறேன்
கடம்பவனத்தில்...

### 4.
## எரியத் தொடங்கியது

தேகச்சுடர்
கரையும் எருவுகள்...

சாணிப்பாலில்
தாகம் தணிக்கிறது
கீழூர் வாசல்...

புளியந் தோப்பில்
இரட்டைத் தென்னை
தலை நீட்டும் கீற்றுகள்...

வரவேற்பிற்குப் போகிறது
குலைதள்ளிய வாழை
வழியனுப்பும் கன்றுகள்...

### 5.
## நீர் சொட்டி

நிரம்பி வழிகிறது வாளி
குளிக்கும் பாலைவனம்...

விற்ற கிடா
வீடு வந்து சேர்ந்தது
வத்தல் கறியாக...

தாழிப்பானைக்குள்
சலசலப்பு
கதிர் மணிகள்...

நெடிய இரவில்
தொடர்கிறது
முத்தத்தின் நடவுகள்...

## 6.

## அடுக்குப் பானைகளுக்குள்

வெகுண்டெழுப்பும்
மரப்பல்லியின்
கீச்சல்கள்
கதவு திறந்த வீடுகளில்
தீண்டிச் செல்லும்
சிதறலாய்
பட்டுத் தெறிக்கிறது
கரும்புகை மேவி
அப்பிக்கொண்ட
மாடவிளக்கில்
மின்மினியாய்
மோதியலையும்
இலவம் பஞ்சின்
நுனி நாக்கினை
சூட்டுப் பழமாய்
சுவைக்கிறது
செந்தீ...

## 7.

## தீக்காயம் பட்ட

நெடிய வடுக்களை
கோதிச் செல்லும் காற்று
மீண்டும் மீண்டும்
வருகை தரும் இரவில்
எனை மட்டும்
தலைகோதிச் செல்கிறது
தும்பு அவிழ
வெளிவரும்
சினைக்கிடாரியென
இருள் சூழ
முட்டி மோதுகிறேன்
இலையிலாத
ஊசிக்குச்சிகளில்
வலைப்பின்னும்
சிலந்திகளின்
எச்சத்தை
நுகர்கிறது இருள்
கையருகே
நானும் ஏந்தினேன்
பிடிபடாத
வண்ணத்துப்பூச்சியாய்
வெளிச்சத்தில் மட்டும்
கோரைப்பாய்
நிழலாய்
பின் தொடர்கிறது...

## 8.

## கவனிப்பாரற்று கிடக்கிறது

இலவசமென்ற வாசகத்துடன்
சிறுநீர்க் கழிப்பிடம்...

வெறிபிடித்து அலைகிறது
சிறகில்லாத மின்மினி
இரவில் சாதிக் கலவரம்...

### 9.

### புழுதிக் கலப்பையில்

பீறிட்டு தெறிக்கிறது
வண்டலின் வாசம்...

வந்தமர்கிறது நாரைகள்
ஊர்திரும்பும்
தூக்கனாங்குருவிகள்...

களைக் கொத்துவில்
உப்புக்கரைகள்
அம்மாவின் கண்ணீர்...

### 10.

### வானம் தொட

கையுயர்த்தினேன்
அருகில் நீலச்சருகுகள்

யானைக் காதின்
விரியும் மடல் இதழ்களில்
மொய்க்கும் நடையெறும்புகளென
பூத்த வெள்ளிமணிகளை
அள்ளிப் பருகும்
குவளைத் தேனீராய்
நா வருடி
பருகிறது
வான் குளம்..

### 11.

### கழுத்தை நெரிக்கிறது

நெகிழிப் பை
உதிரும் கருவேலம் பூ...

தலை சாய்ந்தன
கிளை மரங்கள்
நெடுஞ்சாலை விரிவாக்கம்...

தலை யாட்டுகிறது
காற்றாலை
வருடும் புயற்காற்று...

உடைந்த குடத்தை
மூடி மறைக்கிறது
சிம்னி விளக்கு...

### 12.

### கூந்தல் இல்லை

ஆனாலும் பேரழகு
மகிழுந்தில் மல்லிகை...

நெடிய இரவில்
உலுக்கும் நினைவு
கூடவே அவள்...

வானத்து நிலா
தரையில் பூத்தது
முழு பௌர்ணமி...

காய்ந்த நிலத்தில்
கண்ணீர் துளிகள்
முற்றுகைப் போராட்டம்...

### 13.

### சாக்கடை நீரில்

துர்நாற்றம்
மலரும் அல்லிகள்...

சேலையின் மறைவில்
பசியாறுகிறது குழந்தை
தாய் மடி...

இருப்பிடத்தை இழக்கிறது
நெடிய கிருதுமா நதி
அலங்கரிக்கும் நெகிழிகள்...

## 14.

## உடைந்து போகிறது
செந் தண்ணீர்
வயிற்றில் ஆண்குழந்தை...

கூட்டிய பிறகும்
வாசலை நனைத்தது
எதிர்வீட்டு புங்கைமரம்...

பரணியில் உறங்குகிறது
வெண்கல சருவசட்டி
எடை அதிகமானதால்...

கீரை தீர்ந்தும்
எக்குப் போடுகிறது
கசாப்புக் கடை ஆடு...

## 15.

## செவல் காடுகளில்
காலாறும் குருவியென
விதைத்து விட்டு
நனைந்து வந்தேன்
புழுதி மழையில்

கொஞ்சிக் குழாவின
வேப்பம் பூக்கள்
கிளை பெருத்த
கணுக்களுக்கிடையில்

தலவாசலில் மிதிபட்ட
அறுப்புக் கால்தடங்கள்
அடுப்புக் குமிழைத் தாண்டி
இதமேற்றுகையில்

தலக்கெங்காணியை
அவிழ்த்து விட்டு
தலை துவட்டுகிறேன்
தாழம்பூவாய்
சிதறி விழுகிறது
மயிரிழைகள்...

--

ப.அ.ஈ.ஈ. அய்யனார்.

# பாரியன்பன் நாகராஜன் கவிதைகள்

*1.*

துயரங்களாலும் துன்பங்களாலும்
ஒப்பனைகள் செய்து கொள்வதே
பணியாய் இருக்கிறது எனக்கு.
எனது கவிதைகள் இப்போதேனும்
உனைச் சென்று சேர்ந்திருக்குமா?
எனும் சந்தேகம் என்னுள்
எழத்தான் செய்கிறது.

மரணப்படுக்கையில் துவண்டு
கண்ணீர்த் தவமிருக்கும் என்னை
உன் கருணை விழிகொண்டு
தாலாட்டினால்
சுகங்காணலாம் நானும்.
முன்பெப்போதோ நாம் பேசிய
உரையாடல் சொற்கள் இப்போதும்
என்னிதயத்தை நிறைத்தபடி இருக்கிறது.

அத்தருணங்களில் கூட
உன் தேகப்போர்வையை
சேர்த்தணைத்தவனில்லை நான்.
தற்போதைய நிலைக்கு உன் விரல்களின்
ஸ்பரிசம் எனக்குத் தேவையாய்
இருக்கிறது.

உதடுகளைப் பிரித்து சொற்களை
உதிர்க்க வியலாத நிலையில்
உன் நெஞ்சத்தின் கதகதப்பு மேலும்
இரண்டொருநாள் என்னாயுளைக்
கூட்டிடலாம்.

உள்ளுணர்வுகளில் முழுவதுமாய்
உட்புகுந்து காதல் வினைகளைப்
பூரணமாய் நிகழ்த்து
மயானத்திற்கு யாதொரு
புலம்பலில்லாமல் சென்றிடுவேன் நான்.

*2.*

கொளுத்துகிறது
கோடை வெயில்.
வெளியே போகாதபடி
பாசத்தால் எடுத்து வைக்கிறாள்
பத்திரமாக என்னை என்தாய்.

*3.*

எலிக்கும் பூனைக்கும்
எறும்புக்கும் பயந்து
உறியில் எனக்கென
அம்மா எடுத்து வைத்திருந்த
பலகாரத்தில் கூடவே
நிறைய பாசமும்
பத்திரமாய் இருந்தது.

*4.*

விசித்திரம் நிரம்பியது
உலகம்.
வேடிக்கைக் காட்டினால்
உன்னைக் கோமாளியென்று சொல்லும்.
வேடிக்கைப் பார்த்தால்
உன்னை ஏமாளியென்று சொல்லும்.
கல்லும் எறியவேண்டும்
கனியும் விழக்கூடாது.
அப்படி இருக்கப் பழகிக்கொள்.

*5.*

இரவுகளைக் கொடுத்து
கனவுகளை வாங்கினேன்.

கனவுகளைக் கொடுத்து
நினைவுகளை வாங்கினேன்.
நினைவுகளைக் கொடுத்து
அன்பை வாங்கினேன்.
அன்பைக் கொடுத்து
காதலை வாங்கினேன்.
நிறைய
காதலைக் கொடுத்து
என்னவளை வாங்கினேன்.

- பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



---

## வாமனக் கவிதைகள்

மேலாடையைத் தள்ளி
முத்தமிடுகின்றன
நீர்நிலைகளில் காற்று

அடிக்கிறார்
வலிக்கவே இல்லை அழுகிறேன்
வயதான அப்பா

குடிகாரக் கணவனால்
ஈரமாகி இருக்கிறது
மனைவியின் முந்தானை

பரபரப்பான சாலையில்
நிதானமாய் கடக்கிறது
ஓர் வண்ணத்துப்பூச்சி

ஆயிரமாயிரம் கதைகள்
சொல்கின்றன
புத்தரின் ஒற்றைப் புன்னகை

பூவைப்பிரித்து
பாகங்களைக் குறித்தேன்
திட்டித்தீர்த்தது வண்டினம்

கண்ணீரில் கரை(சி)கிறது
மாதவிலக்கு
தாய்மை பெறாதவள்

பூக்களை வேண்டி
இலைகளோடு தவம் புரிகிறது
வண்ணத்துப்பூச்சி

காதுகளை ஒருசேரக்
குடைந்து விட்டுச்செல்கிறது
வீசும் புயல்

அலைகள் கிழிக்கும் கோடுகளை
தாண்டி விட நினைக்கிறது
மனித மனம்



— பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.

## நட்சத்திரங்கள் நிரம்பி வழியும்

வானத்தில் தேடி ரசிக்கிறோம்...
ஒற்றை நிலவை!

பூக்கள் நிரம்பி வழியும்
பூந்தோட்டத்தில் திரும்ப திரும்ப
பார்க்கிறோம்...
வண்ணத்துப்பூச்சியை!

ஆயிரமாயிரம் அதிசயங்கள்
நிகழும் பூமியில்...
குழந்தையின் புன்னகையில்
வியந்து நிற்கிறோம்!

தேசம் பல கடந்து நாடு திரும்பும்
நமக்காய் காத்திருக்கும்
எத்தனையோ உறவுகளுக்கிடையே...
அன்னையைத் தேடிக்கொண்டிருக்கிறோம்!

எத்தனையோ மரணம் நிகழும் உலகத்தில்
நேசித்தவர்களின் மரணத்திற்காய்
நித்தமும் வாடிக்கொண்டிருக்கிறோம்!

இன்பங்களும், துன்பங்களும்
மாறி மாறி வரும் உலகத்தில்
ஏதோ ஒன்று நம்மை
வாழவைத்துக்கொண்டிருக்கிறது...

அந்த ஏதோ ஒன்றை தேர்ந்தெடுப்பதற்குள்
தொலைத்துவிடுகிறோம்...
ஏராளமான ஒன்றை!



- மு. முபாரக்,
திருச்சி.

## துளிப்பாக்கள்

பலர் விழிக்க
பலர் உறங்க
எல்லோருக்கும் ஒரே விடியல்

ஒரு குழந்தையைப் போல்
கிறுக்குகிறது
அங்குமிங்கும் அலையும் தும்பி

துண்டிக்கப்பட்ட மின்சாரம்
கையில் விளக்கோடு சிறுமி
எவ்வளவு அழகு இந்த ஒளியும்

உயர் மலையே!
குளிரைத் தந்துவிட்டு
மேகத்தை இழுத்து போர்த்திக்
கொள்கிறாய்

இரசித்த மழை
வெறுக்கத் தொடங்கினேன்
அலறும் நாய்க்குட்டிகள்

—

சா. கா. பாரதி ராஜா,
செங்கல்பட்டு.
கைப்பேசி: 9944315732



# துளிப்பாக்கள்

அளவு பெரிதென்று
சேலையுடுத்துவதை நிருத்தி விட்டாள்
நாகரிகப் பெண்மணி!

தீப்பற்றி எரிகிறது
காட்டில் விறகு பொருக்கும்
பெண்ணின் வயிறு!

பட்டுப்போன மரம்
ஒத்தையாய் நடுக்காட்டில்
விறகு ஒடிக்கும் விதவை!

பசித்திருந்த போதும்
விரதம் முடிக்காத கடவுள்
படைத்தவர்களுக்கே படையல்!

சுவர் தாண்டும்
பகையாளி வீட்டு மரம்
இனிக்கும் கொய்யா!

வீட்டிற்குள் கடல்
கடலுக்குள் உலவும் மீன்கள்
மீன் தொட்டி!

கோபுர வெளிச்சம்
நீண்ட தூரம் தெரிகிறது
இரவின் நிழல்!

பூவோடு செர்ந்த நார்
உடன்கட்டை ஏறியது
காய்ந்து போனதும்!

பணியில் ஒய்வு
நன்றாகவே உறங்குகிறார்
இரவு நேர காவலாளி!

வெயில் கொளுத்துகிறது
கொஞ்சம் கூட குறையவில்லை
குளிர் காய்ச்சல்!

உலை கொதிக்கிறது
தணல் குறைத்தும் அடங்கவில்லை
வயிற்று பசி!

—

மகிழை. சிவகார்த்தி



# அருள் மழை

புழுதிபறக்கும் களரியில்
சேவல்மயிர் உதிர சுழன்றாடும்
ஆஜானுபாகு சூரனிடம்
கரகரத்த கட்டைக்குரலும்
ஏளனமாய் நகைக்கும்
வறுமையின் சாபமும்
இணைபிரியா தோழமைகள்
பரிகாசமும் நையாண்டியும்
நிறைந்திருக்கும் அவையில்
பாண்டவர்கள் கூனிக்குருகித் தலைகவிழ
பீஷ்மரின் வெள்ளைத்தாடி
அவிழும் தருவாயில்
பாஞ்சாலியைத் துகிலுறியும்
துரியோதனனின் விரல்களில்
விடாமல் கமழ்கிறது
கணேஷ் பீடியின் துர்நாற்றம்
சாராய நெடியோடு
வரிவரியாய் ஒழுகும்
வண்ண வியர்வையில்
சூரனின் மனைவி சதிராட
கலைரசிகன் ஒருவனின் பரசளிப்பு
விடியல் டிபனுக்காகி
காந்தியின் பொக்கை வாயால்
நகைக்கிறது
கட்டியங்காரனின்
இரட்டை அர்த்த வசனங்கள்
புதுப்பெயல் வெள்ளமாய் பொங்கிட
மூச்சூத் திணறி நீந்துகின்றன
முன்வரிசை இளசுகள் பட்டாலம்
நாரதனின் வருகையில்
கலகம் மயில்தோகை விரிக்க
தேவர்கள் வாங்கும் சாட்டையடி
கோணிமேல் சுருண்டுறங்கும்
அனைவரின் விழிகளையும்
உறக்கம் களைத்துப்
பட்டாம்பூச்சியைச் சிறகடிக்கிறது
தாளம்பிசகாமல்
மிருதங்கம் வாசிப்பவரின் விரலில்
ஐம்பது ரூபாய் செம்பு மோதிரம்
பார்ப்போர் கண்களில்
தங்கமாய் ஜொலிக்கிறது
தீச்சட்டி ஏந்திவரும் காளியின் வாயில்
துடிதுடித்துச் சாகும் சேவலை
உபயக்காரர்களுக்குப்
பங்குவைப்பதில் பெருஞ்சிக்கல்
சூடான டீயோடு
அங்குமிங்கும் நடந்தபடியுள்ள
கடைக்காரரின் கணக்கில்
கிடுகிடுவென உச்சந்தொடுகிறது கடன்
நாளை நாட்டாமை தீர்க்கும்
பட்டுவாடா
லிட்டர் பாலுக்கும் போதாது
விடியவிடிய ஆடியோர்க்கும்
விழித்திருந்த பெரியோர்க்கும்
தூங்கியும் குசுவிட்டும்
இரவைக்கழித்த அனைவர்க்கும்
நன்றிகூறி விடைபெறுகையில்
கோவில் தயாராகின்றது
அடுத்தநாள் உபயத்திற்கு
ஒப்பனைகளை அவிழ்த்தெறிந்து
மூலையில் ஓய்வெடுக்க போய்விட்டனர்
வரமழைப்பொழிந்த ஆண்டவர்கள்
ஊரைச் சுற்றித்திரிந்த தெருநாய்
கோவில்வாசலின் முன்னுள்ள
மின்சாரக் கம்பத்தில் மூத்திரம்பெய்து
பெட்டையின் பின்னால்
நுகர்ந்தவண்ணம் ஓடுகிறது
நானும் நீங்களும்
அதன்பின்னால் போகவில்லை
பிறகு எதன்பின்னால்?

## மழையின் நறுமணம்

குரலற்ற இரவின் காதுகளில்
வளரும் பிறையின் மெல்லிய பிரகாசம்
ஒற்றைக் குயிலின் இராகத்தை
ஓயாமல் இசைக்கிறது
சட்டென்று மேற்கில் தோன்றிய
மின்னல்கீற்றிடம் எதிர்நின்று
நட்சத்திரங்களில் சில
நடுக்கத்தோடு ஒளிர்ந்து சிணுங்குகின்றன
எங்கோ தூரத்தில் பொழிந்த
மழையின் நறுமணம்
தண்ணென்ற காற்றில் குழைந்து
இளந்தாயின் ஸ்பரிசத்தை
மேனியில் உரசி புல்லரிக்கிறது
மீன்களைத் துள்ளி
கலவரத்தோடு நகரும்
பளபளக்கும் நதியின் அலைகளில்
உதிர்ந்திட்ட சருகொன்று
கரையைக் கடக்க விழையும்
எறும்பிற்காய் விரைந்து செல்கிறது
சுவர்க்கோழிகளின் கீச்சொலியில்
செவிகள் சிதைந்து ஒழுக
தள்ளாடும் கரிய உருவம்
அருகில் வர அழைக்கிறது
நிழலும் துணையின்றித்
தயக்கத்தில் காத்திருக்கிறேன்
மாற்றுவழியை யோசித்துக்
கால்களின் அசைவுகள் திரும்புகின்றன
அனைவரும் உறங்கப்போய்விட்டார்கள்
நெருங்கிவருகிறது
தீர்மானித்த பரிவாரங்களோடு
முயங்கித் துய்க்க
யாரும் விரும்பாத ஒன்று.

## நமுத்துப்போன சட்டம்

வெறிபிடித்த மிருகமொன்றின் பசியாற்றி
என்மாமிசம் நைந்து கிடக்கிறது
தற்கொலைக்கான ஆதாரங்களைத்
தேடித்துழாவுகிறது
அவசரகதியில் நியமித்த
தீவிர விசாரணை
திசையெங்கும் தீப்பற்றி எரிகையில்
மத்தியில் சிக்கித் தவிக்கிறது
என் இரகசிய மரணத்தின் பூச்செடி
கனவுகள் நொறுங்கிய இதயம்
அழுகத்துவங்கிற்று
பொன்போல் பூப்போல்
பொத்திக்காத்த தேகம்
அறத்தின் முன்பாக அறுத்தாய்ந்தும்
எளிதில் அகப்படவில்லை
குற்றத்திற்கான தடயங்கள்
பெற்றவயிறு எரிகிறது
அதன் விழிகளில் பெருகும்
கண்ணீரின் தீர்த்தத்தில்
நீராடி மகிழ்கிறது பாவிகளின் தேசம்
நமுத்துப்போன சட்டத்தைச்
சாக்கடையில் எறிந்து
ஓய்வின்றி இயங்குவதாய்
கண்ணாமூச்சி விளையாடுவதில்
சட்டம் ஒழுங்கிற்கு முதலிடம்
அடக்குமுறையின் தீவிறப் பசியாற்றி
அடங்கிப்போனது போராட்டக்களம்
என்பிணமும் சந்தடிசாக்கில்
சாதரணமாய் சாம்பாலானது
உலகந்தழுவிய சதுரங்கத்திலும்
காமன்வெல்த்திலும்
தகவல்தொடர்பு தாவிட
என்கதை காக்கை ஏமாந்த வடை.

—



பொன்.தெய்வா,
ஐவேலி,
விழுப்புரம் மாவட்டம்.

# வியப்பு!!

தன் வகுப்பு மாணவர்களிடம்
பாடம் நடத்தி முடிந்தபின்
கடைசி இரண்டு நிமிடம்
மாணவர்களின்
எதிர்கால கனவுப்
பற்றி கேட்டார்
தமிழாசிரியர்.
நீங்கள் படித்து முடித்து என்னவாக
விரும்புகின்றீர்கள்?

ஒருவன்: நான் டாக்டர்
ஆவேன்.

இரண்டாமவன்: நான்
கலெக்டர் ஆவேன்.

மூன்றாமவன்: நான்
போலீஸ் ஆவேன்.


நான்காமவன்: நான்
பொறியாளர் ஆவேன்.

ஐந்தாமவன்: நான்
மனிதனாக இருக்க
விரும்புகிறேன்.

இறுதியாக கூறியவனை
அழைத்து "நீ ஏன் இவ்வாறு கூறுகிறாய்
என்று கேட்ட ஆசிரியரை
வியப்பில் ஆழ்த்தியது
அவன் கூறிய பதில்
ஐயா,நல்ல டாக்டர்,
நல்ல கலெக்டர், நல்ல
நல்ல பொறியாளர்,
நல்ல போலீஸ் இதெல்லாம்
சுலபாக ஆகிவிடலாம்
ஆனால் இப்போதெல்லாம்
நல்ல மனிதனாக
உருவாகுவது தான்
மிகவும் கஷ்டம்
எனக் கூறினான்.

—

மு. ஜெரோஷா,
திருப்பூர்.



**S. நிசப்த் வர்மன்,**
**3ஆம் வகுப்பு.**

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.